இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 54 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 17 – ஞாயிற்றுக்கிழமை 04 அக்டோபர் 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 54 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 17 - Sunday 04 October 2026 - Chennai 16 Pages ₹ 5.00

## தலைவர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை : மதுராந்தகத்தில் தி.மு.க. மகுடம் சூடுவதை உறுதிசெய்திட குவிந்த மக்கள் வெள்ளம்!



**‘5 நிமிடம் பேசினாலே அகிலமே ஆடிப் போய்விடும்’ என்ற நினைப்பில் இருந்த முதலமைச்சர் ஒரு தொகுதியில் வாக்கு வாங்க ‘குட்டிக்கரணம்’ அடிக்கிறார்!**

# அக் 6 : ஆணவத்திற்கு முடிவு - உதயசூரியன் வெல்லட்டும் !

### மதுராந்தம் இடைத்தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கடல் அலைபோல் திரண்ட மக்களிடையே கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**மதுராந்தகம், அக்.4–**

**5 நிமிடம் பேசினாலே அகிலமே ஆடிப் போய் விடும் என்று பேசிக்கொண்டு இருந்த முதலமைச்சர் இன்றைக்கு, ஒரு தொகுதியில் வாக்கு வாங்கவே குட்டிக்கரணம் அடிக்கிறார் எனவும், அக்டோபர் 6: ஆணவத்திற்கும் துரோகத்திற்கும் முடிவு கட்டும் நாளாக அமையட்டும்! உதயசூரியன் வெல்லட்டும்! என வும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுராந்தகம் இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் சூளுரைத்தார்.**

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் நேற்று (03-10-2026), கலந்துகொண்டு, கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம்:

கடல் போன்ற ஏரியின் செழிப்பைக் கொண்ட மதுராந்தகம் மக்கள் எல்லோருக்கும் வணக்கம்!

மதுராந்தகம் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் – அருமைச் சகோதரர் – வழக்கறிஞர் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு நான் வந்திருக்கிறேன். போன முறை ’மிஸ்’ ஆகிவிட்டது. இந்த முறை ‘மிஸ்’ ஆகக் கூடாது!

**ஆட்சியின் அநியாயங்களை எடுத்துரைக்கும் நமது பரந்தாமன்!**

சகோதரர் பரந்தாமனுக்கு அறிமுகம் தேவையில்லை. உங்களில் பலர் அடிக்கடி செய்திகளில் பார்த்துப் பழகிய முகம்! இப்போது உங்களில் ஒருவராகவே ஆகிவிட்டார். சிறந்த வழக்கறிஞர்! சிறப்பான பேச்சாளர்! அதுவும், இந்த த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்து, வெளுத்து வாங்குகிறார். ஆட்சியில் இருக்கிறவர்கள் பண்ணுகிற அநியாயங்களைச் சிறப்பாக மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.



எந்தவித அச்சுறுத்தலுக்கும் அதிகாரத்திற்கு அஞ்சாதவர்! கேஸ் போட்டும் மிரட்ட முடியாது. சூட்கேஸ் காட்டியும் ரேட் பேச முடியாது. இப்படிப்பட்ட ஒருவர்தான் சட்டமன்றத்தில் உங்கள் பிரதிநிதியாகப் போக வேண்டும்! உங்கள் குரலாக ஒலிக்க வேண்டும். சகோதரர் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க நீங்கள் எல்லாரும் தயாராகிவிட்டீர்களா? நன்றி!

**ஆட்சிக்கு முட்டுக் கொடுக்க வந்துள்ள த.வெ.க. வேட்பாளர்!**

இந்தத் தேர்தல் வழக்கமான தேர்தல் இல்லை. தவிர்க்க முடியாத காரணத்தால் நடக்கிற தேர்தலும் இல்லை. தவிர்த்திருக்க வேண்டிய தேர்தல்! உங்கள் மேல் திணிக்கப்பட்ட தேர்தல். நான்கு மாதங்களுக்கு முன்னாடி நீங்கள் ஒருவரை ஜெயிக்க வைத்தீர்கள்! மெஜாரிட்டி இல்லாத இந்த ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பதற்காக அவர்கள் ராஜினாமா செய்துவிட்டு, திரும்ப வந்து வெட்கமே இல்லாமல் வேற சின்னத்தில் வாக்கு கேட்கிறார்கள்.

அதுவும் ஐந்து ஆண்டுகளாக அவர் எதுவும் செய்யவில்லை என்று, அவரை வைத்துக்கொண்டே அமைச்சர் சொல்கிறார். அதைச் சொல்லிவிட்டு, அவருக்கே வாக்கு கேட்கிறார். இதைவிட மதுராந்தகம் மக்களான உங்களை கேவலப்படுத்த முடியுமா? தமிழ்நாட்டில் ரிசல்ட் வந்து ஜெயித்த கையோடு, ஒரு MLA ராஜினாமா பண்ணுவது இதற்கு முன்னால் நடந்திருக்கிறதா? இல்லவே இல்லை! அப்பட்டமாக நடந்த குதிரை பேரத்தால் இந்தத் தேர்தல் நடக்கிறது.

ஆனால், நாம் இப்படி சொன்னால் முதலமைச்சர் என்ன பேசுகிறார் தெரியுமா? ”MLA பதவியை ரிசைன் செய்துவிட்டுத்தான் அவங்க த.வெ.க.வில் சேர்ந்திருக்காங்களாம்” – பெரிய கண்டுபிடிப்பு! ரிசைன் பண்ண வில்லை என்றால், கட்சித் தாவல் தடைச் சட்டம் பாய்ந்து விடும். அதனால்தானே பொய்யான காரணத்தைச்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### இது மர்மமான ஆட்சி!

முதலமைச்சர் அவர்களே, நீங்கள் மட்டும்தான் இது மக்களாட்சி என்று சொல்கிறீர்கள். உண்மையில் இது மர்மமான ஆட்சி. யாரோ ஒருத்தரின் கன்ட்ரோலில், யாருடைய நன்மைக்கோ இங்கே கார்ப்பரேட் மாபியா ஆட்சி நடக்கிறது. எதிலுமே வெளிப்படைத்தன்மை இல்லை, எல்லாம் திரைமறைவில் நடக்கிறது.